மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No.142/2019**

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

பி.வா.சா.1 (ரத்தினக்குமார்)

கு.வி (3 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில்)

வழக்கு ஏற்கனவே சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் தாக்கலாகி தற்போது இந்நீதிமன்றத்திற்கு தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் 1 முதல் 10 பிரதவிாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சீனிவாசராகவன் ஆஜராகி எதிர்வழக்காடியுள்ளார் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகளுக்காக நானே எதிர்வாழக்காடி நானே வழக்கறிஞர் நியமனம் செய்து, மற்ற பிரதிவாதிகள் வழக்கறிஞருக்கு தனிதனியே கட்டணம் செலுத்தினார்கள் என்றால் சரிதான். சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் எல்லா பிரதிவாதிகளுக்காக நானே எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல, எனக்கு மட்டும் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் 1, 2 4 முதல் 10 பிரதிவாதிகளுக்காக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேன், மற்ற பிரதிவாதிகள் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரை தயார் செய்வதற்கு நான் தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி மற்றும் என்னை தவிர மற்ற பிரதிவாதிகள் வெளிநாட்டில் இருக்கிறார்களா என்றால் சரியல்ல, 3ம் பிரதிவாதி விஜயா, 4ம் பிரதிவாதி ஐஸ்வர்யரத்தினம் ஆகியோர் வெளிநாட்டில் உள்ளார்க்ள. ஜெயசித்ரா, விக்னேஸ்வரன் மானாமதுரையில் உள்ளார்கள். வெளிநாட்டில் இருக்கும் எனது சகோதரிகளுக்காக நானே தாவா சொத்துக்களை பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் பிரதிவாதியான எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.14 முதல் 22 வரை வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உயில் எந்த தேதியில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் 03.08.2016 அன்று மானாமதுரையில் உள்ள

தனபால் என்பவர் மூலம் எழுதப்பட்டது. பொன்னம்மாள் என்பவர் மேற்படி உயிலில் எங்கு வைத்து ரேகை வைத்தார் என்றால் சிவகங்கையில் உள்ள நோட்டரி பப்ளிக்கில் வழக்கறிஞர் சுந்தர், 2 சாட்சிகள் முன்னிலையில் கைரேகை செய்ததாக எழுதப்பட்டுள்ளது. உயில் எழுதப்பட்ட நேரம், பொன்னம்மாள் கைரேகை வைக்கும் போது நான் உடன் இருக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் மேற்படி உயில் எப்போது கிடைத்தது என்றால் 04.08.2016ல் நோட்டரி பப்ளிக் கைரேகை செய்த பின்னர், 05.08.2016 காலையில் எனது தாயார் உயிலை என்னிடம் கொடுத்தார். உயில் எழுதப்பட்ட காலத்தில் 1ம் பிரதிவாதியான தாயார் பொன்னம்மாள் என்னுடன் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். உயில் எழுதுவதற்கு முன்னர் எத்தனை மாதங்கள் முடியாமல் உடல்நிலை குறைவுற்று இருந்தார் என்றால் எனது தாயார் நல்ல உடல்ஆரோக்கியத்துடன், சுயநினைவோடு தான் இருந்தார். எனது தாயார் நல்ல உடல்ஆரோக்கியத்துடன், சுயநினைவோடு இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்பதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் பதிவு செய்து தருமாறு எனது தாயாரை நான் கேட்கவில்லை. மேற்படி உயிலை இந்த வழக்கிற்காக தான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன், வேறு எங்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உயிலை எனது தாயார் என்னிடம் கொடுக்கும் போது உறவினர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். உயிலில் சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் தெரியுமா என்றால் எனது குடும்ப நண்பரான செல்வம் த/பெ நாகநாதன், பாலமுருகன் த/பெ தில்லைநாயகம், பாலமுருகன் எனது டிரைவர் என்றால் சரிதான். உயிலில் சாட்சி கையெழுத்து எனது உறவினர்களோ, என் உடன்பிறந்தவர்களோ போடவில்லை என்றால் சரிதான். உயில் எழுதிய அன்றே நோட்டரி பப்ளிக்கிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். பொன்னம்மாள் 03.08.2016 அன்று மேற்படி உயிலில் எனது தாயார் கைரேகை வைத்தாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நோட்டரி பப்ளிக் அலுவலகத்திற்கு யார் யார் சென்றது என்றால் செல்வம், பாலமுருகன், செல்வத்தின் மகன் மூர்த்தி சென்றார்கள். இவர்கள் மூன்று பேரும் சென்ற விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தாயார் சொல்லி தான் தெரியும். மேற்படி உயில் நோட்டரி பப்ளிக் முன் எழுதப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது எதிர்வழக்குரையில் 13ம் பத்தியில் தாவா 3, 4, 5 இலக்க சொத்துக்களில்

மொத்தமாக உள்ள 9 ஏக்கர் சொத்தில் 3 ஏக்கர் சொத்து மட்டும் எனக்கு உயில் எழுதிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 உயில் ஆவணத்தில் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தவிர வேறு சொத்துகள் சேர்த்து உயிலில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். உயில் பதிவு செய்யப்படாததால் அதை மெய்ப்பிக்கும் பொருட்டு சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் **Probate** வழக்கு தாக்கல் செய்து **Probate** செய்தீர்களா என்றால் இல்லை. உயிலுடன் சேர்ந்து வில்லங்க சான்றிதழ், பட்டா உள்ளதால் அது உயிலின் ஒரு பகுதியா என்றால் எனது தாயார் உயிலை என்னிடம் கொடுக்கும் போது மேற்படி ஆவணங்கள் அதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இணைக்கப்பட்ட ஆவணங்களான பட்டா, வில்லங்கசான்றிதழில் எனது தாயாரின் கைரேகை உள்ளதா என்றால் இல்லை. உயிலுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிற ஆவணங்கள் உயிலின் ஒரு பகுதி அல்ல என்றும்,வழக்கில் மாற்றம் ஏற்படுவதற்காக மேற்படி ஆவணங்கள் உயிலுடன் தாக்கல் சயெ்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தேவையில்லாத ஆவணத்தை உயிலுடன் கொடுத்ததால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயிலின் அடிப்படையில் தான் பி.வா.சா.ஆ.14 முதல் 22 வரையிலான ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலில் உள்ள பொன்னம்மாளின் ரேகை தானா என்பதை ஒப்பிட்டு பார்த்து நிரூபணம் செய்யமுடியுமா என்றால் முடியும், பொன்னம்மாளின் ரேகை உடைய பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்னிடம் உள்ளது. நான் தாக்கல் செய்த உயில் பொன்னம்மாள் எழுதிவைக்கவில்லை என்றும், நானே இந்த வழக்கிற்காக தயார் செய்தது என்றால் சரியல்ல. உண்மையில் பொன்னம்மாள் எழுதி வைத்திருந்தால் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் எழுதி வைத்திருப்பார்கள் என்றும், அதை பதிவு செய்திருப்பார்கள் என்றும் சொன்னால் சரியல்ல, சுப்பாபிள்ளை த/பெ.சுப்பையா அவரிடம் எனது தாயார் உயில் குறித்து சொல்லியுள்ளதாக எனது தாயார் என்னிடம் சொல்லியுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ மேற்படி உயில் பற்றி சுப்பாபிள்ளை த/பெ.சுப்பையா என்பவருக்கு தெரியும் என்றோ, 03.08.2016ல் உயில் எழுதப்பட்டது பற்றியோ, 04.08.2016ல் நோட்டரி பப்ளிக் சாட்சிகள் முன்னிலையில் எழுதப்பட்டது பற்றியோ, 05.08.2016ல் எனது தாயார் மேற்படி உயிலை என்னிடம் எனது தாயார் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக

ஓ.எஸ்.எண்.266/2019 வழக்கு தாக்கல் செய்து மேல்நடத்தவில்லை என்றால் சரிதான். ஓ.எஸ்.எண்.266/2019 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பி.வா.சா.ஆ.23, 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்களுக்கு பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரிதான். பொன்னம்மாளின் மற்ற வாரிசுகளுக்கு உயிலின் அடிப்படையில் பட்டா மாறுதல் சம்பந்தமாக அறிவிப்பு எதுவும் அனுப்பினீர்களா என்றால் தெரியவில்லை. பட்டா மாறுதல் பற்றிய விபரம் தாசில்தார் அலுவலகத்தில் உள்ள கோப்புகளில் பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். பட்டா மாறுதல் சம்பந்தமாக தாலுகா அலுவலகத்திற்கு நேரில் செல்லவில்லை என்றால் சரிதான், ஆன்லைனில் தான் செய்தேன். தாலுகா அலுவலகத்தில் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். என்னை மட்டும் தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். எந்த மாதம், எந்த வருடம் விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. 5ம் பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் மோசடி பட்டா மற்றும் உயில் உற்பத்தி செய்ததாக புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. வருவாய்துறை மற்றும் காவல்துறையில் அதிக பணம் கொடுத்து மேற்படி புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் தடுத்துவிட்டீர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் உயில் மீது எனக்கு பாத்தியம் கேட்டு எதிர்கோரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உடன்பிறந்த சகோதரிகளின் பாகத்தை மோசடியாக பெறுவதற்காக பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 9வது இலக்க சொத்து பொறுத்து மற்ற பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்துள்ளாரா என்றால் 2, 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்துள்ளார். 10வது இலக்க சொத்து நத்தம் இடம் என்றால் சரிதான். ஆதியில் எனது தாத்தா கன்னுச்சாமி கோனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கன்னுச்சாமியின் சகோதரி சிட்டாளம்மாளுக்கு 09.12.1954ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, 09.12.1954ம் தேதி எல்லா சொத்திற்கும் சேர்த்து பவர் பத்திரம் சிட்டாளம்மாள் கன்னுச்சாமி கோனாருக்கு எழுதிகொடுத்துள்ளார். மேற்படி விபரத்தை நிருபண வாக்குமூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால்சரிதான். 09.12.1954 தேதிய கிரைய ஆவணத்தை பார்த்திருக்கிறீர்களா என்றால் இல்லை. நத்தம் பட்டா அசல் யாரிடம் உள்ளது என்றால் யாரிடமும் இல்லை. நத்தம் பட்டா பொன்னம்மாள் பெயரில் உள்ளது. சிட்டாளம்மாள் 02.07.1992ல் 5ம் பிரதிவாதிக்கும் அவரது கணவர்

**ராஜசேகருக்கும் பதிவு செய்யப்பட்ட உயில் எழுதியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அந்த காலத்தில் சிட்டாளாம்மாள் பெயரில் இல்லை, பொன்னம்மாள் பெயரில் உள்ளது. உயில் எழுதுவதற்கு முன்னரே பொன்னம்மாள் பெயரில் மாறிவிட்டது என்றால் 1987 முதல் 2022 வரை பொன்னம்மாள் பெயரில் தான் இருந்தது. 10வது இலக்க சொத்து காலியிடம் என்றால் சரிதான். நான் உடன்பிறந்த சகோதரிகளின் பாகத்தையும் மோசடியாக பெறுவதற்காக இந்த வழக்கில் வாதியுடன் கூட்டுச்சதி செய்து இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. உடன்பிறந்த சகோதரர் ராஜசேகரன் இந்த வழக்கிற்கு முன்பாக இறந்துவிட்டார் என்றால் சரிதான். இந்தியாவில் இருக்ககூடிய சொத்துக்களுக்கு சகோதரிகளுக்காக மேற்பார்த்து வருவது நான் மட்டும் தான் என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை